# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 06 செவ்வாய்க்கிழமை 22.07.2025 கதிர் 262









## துப்பாக்கி, தோட்டாக்களுடன் கொழும்பில் இருவர் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 22

கொழும்பில், தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேலுவன வீதி பகுதியில் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் இளைஞர் உட்பட இருவர் நேற்று திங்கட்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் விசாரணை பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் விசாரணைப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே வெளிநாட்டுத்

7➤

# இனப்பிரச்சினைக்கான தீர்வு: வாக்குறுதியை நிறைவேற்றுக!

## சஜித் அணி வலியுறுத்து



கொழும்பு, ஜூலை 22

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, புதிய அரசமைப்பு என்பன தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசமைப்பு இயற்றப்படும் எனத் தனது ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்திருந்தார். விரைவில் அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

அத்துடன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும், மனித உரிமைகள் பாதுகாக்கப்படும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றெல்லாம் உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

7➤



## தென்னக்கோன் குற்றவாளி! விசாரணைக் குழு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 22

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன்மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்களில் அவர் குற்றவாளி எனவிசாரணைக்குழு அறிவித்துள்ளது என்று சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன இன்று அறிவித்தார். தேசபந்து தென்னக்கோனைப் பதவியில்

7➤

## 86 கைக்குண்டுகளுடன் ஒருவர் வவுனியாவில் இன்று கைது!



வவுனியா, ஜூலை 22

கொழும்பில்கைது செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர் வழங்கிய தகவலின்படி வவுனியா, நேரியகுளம் பகுதியில் வீடு ஒன்றில் மறைத்து

7➤

## பிரதம நீதியரசர் பதவிக்கு ஜனாதிபதியால் பிரீதி பத்மன் சூரசேனவின் பெயர் பரிந்துரை

கொழும்பு, ஜூலை 22


நாட்டின் அடுத்த பிரதம நீதியரசராக உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீதி பத்மன் சூரசேனவின்பெயரை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பரிந்துரைத்துள்ளார்.

இந்தப் பரிந்துரையை ஜனாதிபதி அரசமைப்புச்சபைக்கு வழங்கியுள்ளார்.

இந்தப் பரிந்துரையின் மீது இறுதி முடிவை எடுக்கும் வகையில் அரசமைப்புச் சபை நாளை புதன்கிழமை கூடவுள்ளது.

தற்போதைய பிரதம நீதியரசர் மூர்து பெர்னாண்டோ எதிர்வரும் ஜூலை 27ஆம் திகதி ஓய்வுபெறவுள்ள

7➤



## தலைமன்னார் கடற்பரப்பில் 4 இந்திய மீனவர்கள் கைது!

### ஓகஸ்ட் முதலாம் திகதி வரை விளக்கமறியல்

மன்னார், ஜூலை 22

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த நிலையில் கைது செய்யப்பட்ட 4 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் முதலாம்

7➤



# ‘நட்புறவுப் பாலம்’ என்ற பெயரில் பாரிய சதித்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ‘நட்புறவுப் பாலம்’ என்ற பெயரில் அநுரகுமார திசாநாயக்கவின் அரசு ஒரு பாரிய சதித்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் எச்சரித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அன்றைய தினம் கறுப்புக் கொடி கட்டி தமிழ் மக்கள் தங்கள் எதிர்ப்பையும் துக்கத்தையும் வெளிப்படுத்த வேண்டும்என அவர் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொக்குவிலில் உள்ள தனது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனைத் தெரிவித்த கஜேந்திரன், பின்வருமாறு கூறினார்:

“ஜூலை 23 என்பது தமிழ் மக்களுக்கு கறைபடிந்த ஒரு நாள். 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற பாரிய இனப்படுகொலையை மறைப்பதற்கும், அதன் வரலாற்றை மழுங்கடிப்பதற்கும் அநுர அரசு ஒரு சதித்திட்டத்தை மிகச் சாதுர்யமாக முன்னெடுக்க முயல்கிறது. இதற்காக, தென்னிலங்கையில் இருந்து ஒரு தொகுதி நபர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து, அநுர அரசின் ஆதரவாளர்களைப் பயன்படுத்தி, மக்களை ஏமாற்றி, இனங்களுக்கிடையிலான




நல்லிணக்கத்தை உருவாக்குவதாகக் கூறி ‘நட்புறவுப் பாலம்’ என்ற நிகழ்வை நடத்த திட்டமிடுகிறது.

கஜேந்திரனின் கூற்றுப்படி, இந்த நிகழ்வு தமிழ் மக்கள் ஒன்றிணைந்து இலங்கையில் நடைபெற்ற யுத்தக் குற்றங்களுக்கு சர்வதேச குற்றவியல் விசாரணையை கோரும் முயற்சிகளை சிதைப்பதற்கும், திசை திருப்புவதற்கும் மேற்கொள்ளப்படும் ஒரு தந்திரோபாயமாகும். “இந்த நட்புறவுக் கொண்டாட்டம், 1983 இனப்படுகொலையை மூடி மறைப்பதற்கான ஒரு உத்தியாகவே உள்ளது. முந்தைய அரசுகள் இந்த விவகாரத்திற்கு தீர்வு வழங்காவிட்டாலும், அதை மறைக்க முயற்சிக்கவில்லை. ஆனால், அநுர அரசு, முந்தைய அரசுகள் தீர்வு வழங்கவில்லை என்ற தோற்றத்தை உருவாக்கி, இந்த விடயத்தை நீர்த்துப் போகச் செய்ய முயல்கிறது,” என அவர் குறிப்பிட்டார்.

அநுர அரசு, யுத்தக் குற்ற விசாரணை மற்றும் சர்வதேச விசாரணையை தேவையற்றவை என சர்வதேச சமூகத்திற்கு காட்ட முயல்வதாகவும் கஜேந்திரன் குற்றம் சாட்டினார். “‘நட்புறவுப் பாலம்’ என்ற இந்த நிகழ்வு, அநுர அரசின் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாகவே உள்ளது. இது தமிழ் மக்களின் அழிவுகளை மறைத்து, யுத்தக் குற்றங்களுக்கு நீதி கோரும் முயற்சிகளை பலவீனப்படுத்துவதற்கான முயற்சியாகும்.

கஜேந்திரன், தமிழ் மக்களை விழிப்புடன் இருக்குமாறு வலியுறுத்தி, “எதிர்வரும் ஜூலை 23 அன்று, தென்னிலங்கையிலிருந்து வரவுள்ளவர்களுடன் இணைந்து அநுர அரசின் ஆதரவாளர்களின் இந்த முயற்சியில் தமிழ் மக்கள் பங்கேற்கக் கூடாது. அந்த நாளை ஒரு கறைபடிந்த நாளாகக் கருதி, கறுப்புக் கொடி கட்டி எமது துக்கத்தையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்துவோம்,” என அழைப்பு விடுத்தார். (ஐ)

# நாட்டை உலுக்கிய முச்சக்கரவண்டி கொள்ளை – பெண் உட்பட மூவர் கைது

*கொழும்பு, ஜூலை 22*

*தொடர்ச்சியான முச்சக்கர வண்டிக் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பெண் ஒருவர் உட்பட மூன்று சந்தேகநபர்களை கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.*

*நேற்று கஹதுடுவ பொலிஸ் பிரிவின் பொல்கசோவிட்ட பகுதியில், கல்கிசை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் குழுவொன்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில், 06 கிராம் 700 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 05 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்தனர்.*

*சந்தேக நபர்களிடம் மேலும் விசாரணை நடத்தியபோது, அவர்கள் வாடகைக்கு செல்வது போன்று முச்சக்கர வண்டிகளில் பயணித்து, சாரதிகளின் முகத்தில் மிளகாய்த் தூள் வீசி முச்சக்கர வண்டிகளைக் கொள்ளையடித்து வந்ததாகத் தெரியவந்தது. இந்தக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக சந்தேக நபர்களில் ஒருவரின் மனைவியும்கைது செய்யப்பட்டுள்ளார்.*

*24 மற்றும் 27 வயதுடைய சந்தேக நபர்கள் கலவான மற்றும் கஹதுடுவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். 29 வயதுடைய சந்தேக நபர் கஹதுடுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் கஹதுடுவ, பொரலஸ்கமுவ மற்றும் மொரகஹஹேன பொலிஸ் பிரிவுகளில் முச்சக்கர வண்டிகளைத் கொள்ளையடித்துள்ள நிலையில், 4 முச்சக்கர வண்டிகளை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.*

*கல்கிசை பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது. (ஐ)*



# புலம்பெயர்ந்த தேசங்களின் அரசியலில், மக்கள் பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள்

இலங்கை செம்மணி புதைகுழி தொடர்பில் சுவாமி சங்கரானந்தா புலம்பெயர்ந்த தேசங்களின் அரசியலில், மக்கள் பிரதிநிதிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை என்ற நாட்டில் அந்த நாடு தனது சுதந்திரத்தை பெற்றதிலிருந்து இன்று வரையிலும், ஈழத் தமிழர்களுக்கு எதிராக நடத்தி வரும் தொடர்ச்சியான இனவழிப்பு, அந்த இலங்கை என்ற நாட்டின் சிங்களப் பேரினவாத அரசின் திட்டமிட்ட நோக்கம்தான் என்னும், கடுமையான உண்மையை அந்த நாடு பலமுறை நிரூபித்திருக்கிறது.

அந்த வகையில், அந்த நாடு அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு செய்து வந்த கொடூரத்தின் ஆழமான சாட்சியங்களில் ஒன்றாக, செம்மணி மனிதப் புதைகுழி என்ற கொடூரமான சம்பவம் வெளிப்பட்டு இருக்கும் இன்றைய நிலையில், இவ்வாறான இன அழிப்பு என்பது, ஒரு சர்வதேசக் குற்றமாகும்.

இந்த செம்மணி மனிதப் புதைகுழி என்பது இலங்கை ராணுவ வீரர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களின் மூலம், சர்வதேச மனித உரிமை அமைப்புகளால் உறுதி செய்யப்பட்ட உறுதியான ஆதாரங்களைக் கொண்டது என்ற வகையில், இது விடயம் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள இணைத் தலைமை நாடுகளை **(Core Group Nations)** ஒருங்கிணைந்து அணுகுவது முக்கியம்.

இலங்கையில்தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற மற்றும் நடைபெற்று வரும் இன அழிப்பை உறுதிப்படுத்துவதன் மூலம், அந்த இணைத் தலைமை நாடுகளைக் கொண்டு, இலங்கை அரசை சர்வதேச சட்டப் பொறிமுறை முறைமைக்குள் கொண்டு வந்து, ஈழத் தமிழர்களுக்கான நீதியையும், மற்றும் சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வையும், எட்ட வைக்க வேண்டும்.

இந்த வழியை அடைவதற்காக, இலங்கையில் பிறந்து, சிங்கள பௌத்த பேரினவாத அரசின் அடவடித்தனங்களால், புலம்பெயர்ந்து வந்து, அந்த புலம்பெயர்ந்த தேசங்களின் அரசியலில், மக்கள் பிரதிநிதிகளாக இருக்கும், அல்லது, மக்கள் பிரதிநிதிகளாக இருந்த,

பிரித்தானிய பாரளுமன்ற உறுப்பினர் உமா குமரன், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஹறி ஆனந்த சங்கரி,

கனேடிய பாராளுமன்ற உறுப்பினரான ஜ/வானிட்டா நாதன், கனேடிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன்,

கனேடிய ஒன்டாரியோ மாகாண அமைச்சரான விஜய் தணிகாசலம் மற்றும், ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினரான அஷ்வினி அம்பிகைப்பாகர்,

அவுஸ்திரெலியாவின் பிரிஸ்பேனில் பகுதியின் முன்னாள் மாநகர உறுபினராக இருந்த ஜொனத்தன் ஸ்ரீரங்கநாதன், அவுஸ்திரெலியாவின் மெல்போர்னில் உள்ள ஆழசநடயனெ மாநகர சபையின் உறுப்பினராக இருந்த சமந்தா ரத்னம்,


அத்தோடு, நோர்வே நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் கம்ஷாஜினி குணரத்தினம் ஆகியோர், தாம் வாழும் நாட்டின் மக்களின் வாழ்வாதாரத் தேவைகளுக்கும் உரிமைகளுக்கும் மட்டுமல்லாது, பிறந்த தேசத்தில் நடந்த இன அழிப்புக்கான சர்வதேச நீதிக்காகவும், முக்கிய பொறுப்புடன் செயற்பட வேண்டியதும் அவர்களின் கடமையாகும்.

இதில் நோர்வே நாடாளுமன்றத்தில் தேர்வாகியபோது கம்ஷாஜினி குணரத்தினம், ஈழத் தமிழர்களுக்கான நீதி விசாரணையை மேற்கொண்டு வரும்ஐ.நா மனித உரிமை கவுன்சிலின் நடவடிக்கைகளைப் பற்றி கேட்ட பொழுது "நான் அதைப் பின்தொடரவில்லை, எனவே அதற்கு பதிலளிக்க முடியாது." என முன்னர் கூறியிருந்தாலும் , இலங்கையில் பிறந்து சிங்கள பேரினவாத அரசின் அழுத்தத்தால் தனது குடும்பத்துடன் புலம்பெயர்ந்து வந்தவர் என்ற வகையில் அவருக்கும் இது ஒரு தார்மீகக் கடமை இருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு இது சம்பந்தமாக இவர்கள் அனைவரும் இணைத் தலைமை நாடுகளுக்கு ஒரே குழுவாக விஜயம் செய்து அந்த நாடுகளின் பிரதிநிதிகளை அணுகி, செம்மணி போன்ற மனிதப் படுகொலைகளின் ஆதாரங்களை சட்ட ரீதியாக முன்னிறுத்தி, ஈழத் தமிழருக்கான நீதியை சர்வதேச மேடையில் வலியுறுத்தி, சிங்கள பேரினவாதத்தின் இன அழிப்பை அதிகாரபூர்வமாக வெளிப்படுத்தும் முயற்சியை முன்னெடுக்க வேண்டும் என்பதை, இவர்களைப் போல் நானும் ஒரு புலம்பெயர்ந்த தமிழனாக, இவர்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த முயற்சிக்குத் தேவையான சட்ட ஆதரவையும், திட்டமிடல்களையும், அந்தந்த நாடுகளில் உள்ள ஈழத் தமிழ் செயல்பாட்டாளர்களின் ஒத்துழைப்புடனும், சட்ட வல்லுநர்களின் ஆலோசனையுடனும், செயல்படுத்தவேண்டும் என்பதால் அந்த மரியாதைக்குரிய மக்கள் பிரதிநிதிகளுக்கு பொறுப்புடன் ஆலோசனை வழங்கி இதனை முன்னெடுக்க, அறிவுசார் புலம்பெயர்ந்த சமூகத்தை வேண்டிக் கொள்கின்றேன்.

இந்த விடயத்தை நான் மேலே குறிப்பிட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குளடுத்து செல்ல நான் குறிப்பிட்ட நாடுகளில் வாழும் புலம் பெயர்ந்த உறவுகளிடன் பணிவுடன் வேண்டிக் கொள்கின்றேன் என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கையில் நடைமுறைக்கு வரவுள்ள கடுமையான சட்டம்




*கொழும்பு, ஜூலை 22*

*போக்குவரத்து குற்றங்களுக்காக நீதிமன்றங்களால் தற்காலிகமாக உரிமம் இரத்து செய்யப்பட்ட ஓட்டுநர்கள் அடுத்த ஆண்டு முதல் பயிற்சி வகுப்புக்கு அனுப்பப்படுவார்கள் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.*

*பயிற்சி பாடத்திட்டத்தை முடித்து ஓட்டுநர் இடைநீக்க காலத்தை நிறைவு செய்த ஓட்டுநர்களுக்கு நீதிமன்றங்கள் ஓட்டுநர் உரிமங்களை வழங்கும் என ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.*

*போக்குவரத்து குற்றங்களை செய்யும் ஓட்டுநர்களுக்கான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த இந்தச் சட்டம் அதிகாரம் பெற்றிருந்தாலும், அது இன்னும் செயல்படுத்தப்படவில்லை.*

*எனினும் தற்போது அதற்கான பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.*

*செயல்பாட்டுத் திட்டத்தில் அததை சேர்த்து 2026ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்க அமைச்சு திட்டமிட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார்.*

*வீதி போக்குவரத்து குற்றங்களை செய்யும் ஓட்டுநர்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்கும் முறை மற்றும் பயிற்சிப் பாடத்திட்டம் மூலம் ஒழுக்கமான ஓட்டுநரை உருவாக்குவதே இதன் முதன்மை நோக்கம் என்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.*

*(ஐ)*

# 1,489 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற்றம்!

கொழும்பு, ஜுலை 22

இலங்கையில் இருந்து 2022 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில், நிபுணர்கள் உட்பட 1,489 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியதாக சமீபத்திய ஆய்வு ஒன்று வெளிப்படுத்தியுள்ளது.

அதிக எண்ணிக்கையிலான வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது சுகாதார உள்கட்டமைப்பை சீர்குலைத்து, குறிப்பாக கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் நிபுணர்களின் பற்றாக்குறையை உருவாக்கியுள்ளதாக ஆய்வு கூறுகிறது.

இது வைத்தியக் கல்வியையும், அனைவருக்கும் சுகாதார சேவைகளை சமமாக அணுகுவதற்கான உரிமையையும் பாதித்துள்ளது என்றும் கூறுகிறது.

அதேவேளை இலங்கை வைத்தியர்கள் இடம்பெயர்ந்த நாடுகளையும் குழு ஆய்வு செய்து, கடந்த ஆண்டு இறுதிக்குள் பிரிட்டனில் தேசிய சுகாதார சேவை மற்றும் சமூக சுகாதார சேவைகளில் பணிபுரியும் இலங்கையர்களின் எண்ணிக்கை 121 சதவீதம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டியது.



ஆய்வின்படி, கடந்த ஆண்டு இறுதியில் இங்கிலாந்தில் 3,082 இலங்கை வைத்தியர்கள் பணிபுரிந்தனர், இதில் 391 மூத்த நிபுணர்கள் மற்றும் 413 நிபுணர்கள் அடங்குவர்.

அதேசமயம் , 2022 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், ஆஸ்திரேலியாவிற்கு அதிக எண்ணிக்கையிலான வைத்திய நிபுணர்கள் குடிபெயர்ந்த 10 நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது என்பது தெரியவந்துள்ளது. (ஐ)


# உலக சாதனை படைக்க காத்திருக்கும் இலங்கையின் புதிய கட்டிடம்

கொழும்பு, ஜுலை 22

கொழும்பு துறைமுக நகரத்தில் புதிய க்ளோத்ஸ் பின் டவர்ஸ;**(Clothes pin Towers)** திட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

உலகின் மிகப்பெரிய கட்டிடக் கலைப் படைப்பாக கின்னஸ் உலக சாதனையில் இடம்பிடிக்க இந்தத் திட்டம் தயாராக இருப்பதாக கூறப்படுகின்றது.

லண்டனில் உள்ள பிக் பென்னை விட பெரிய கடிகாரத்தை நிர்மாணிப்பதன் மூலம் இந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதற்கமைய, அங்கு 15 மீட்டர் உயரம் கொண்ட ஒரு பிரமாண்டமான கடிகாரம் கட்டப்பட உள்ளது. (ஐ)

# ஏழு மாதங்களுக்குள் 31 அரசாங்க அதிகாரிகள் அதிரடியாகக் கைது

கொழும்பு, ஜுலை 22

கடந்த ஏழு மாத காலப்பகுதிக்குள் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின் கீழ் அரசாங்க அதிகாரிகள் 31 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடப்பு ஆண்டின் தற்போது வரையான ஏழு மாத காலப்பகுதிக்குள் அரசாங்க அதிகாரிகளுக்கு எதிராக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கான விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் 44 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அதன் மூலம் 31 அரசாங்க அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பாடசாலை அதிபர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் உள்ளடங்கியுள்ளனர். இதற்கிடையே இலஞ்சம் மற்றும் ஊழல், மோசடிகளைத் தடுப்பதற்கான விசாரணை ஆணைக்குழுவுக்கு நடப்பு ஆண்டில் மட்டும் 2138 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அதனடிப்படையில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# ஜெகதீப் தன்கர் ராஜினாமாவில் சந்தேகத்தை கிளப்பும் காங்கிரஸ்



ஜெகதீப் தன்கர் திடீர் ராஜினாமாவின் பின்னணியில் ஏதோ ஒரு பெரும் விஷயம் நடந்திருக்கலாம் என்று காங்கிரஸ் சந்தேகித்துள்ளது. நாட்டின் துணை ஜனாதிபதியாக இருப்பவர் ஜெகதீப் தன்கர். 2022 ஆகஸ்ட் 11ம் தேதி இந்தியாவின் 14வது துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் பதவி ஏற்றார்.

அவையிலும், அவைக்கு வெளியேயும் எதிர்க்கட்சிகளை கடுமையாக விமர்சனம் செய்து வந்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. குறிப்பாக காங்கிரஸ் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் எம்பிக்களுக்கும் மாநிலங்களவை தலைவராக இருந்த ஜெகதீப் தன்கருக்கும் பலமுறை கடும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இந்த சூழலில் நேற்று மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாளில் ஜெகதீப் தன்கர் மாநிலங்களவையை வழிநடத்தினார். இந்த சூழலில் நேற்று இரவு துணை ஜனாதிபதி உடல் நலக்குறைவால் பதவியில் இருந்து விலகுவதாக ஜெகதீப் தன்கர் திடீரென அறிவித்தார். இதுதொடர்பாக தனது ராஜினாமா கடிதத்தை அவர் ஜனாதிபதி திரவுபதி முர்முவுக்கு அனுப்பி வைத்தார்.

இது குறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது எக்ஸ் பதிவில், "நேற்று பகல் 12.30-க்கு ஜெகதீப் தன்கர் தலைமையில் மாநிலங்களவையின் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடந்தது. அவையின் ஆளுங்கட்சித்தலைவர் நட்டா, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜ/ உள்ளிட்ட மூத்த உறுப்பினர்கள் அதில் பங்கேற்றனர். மீண்டும் மாலை 4.30 கூட்டம் கூடியபோது, நட்டா, ரிஜிஜ/ அதில் பங்கேற்கவில்லை. அதுகுறித்த தகவலும் தன்கரிடம் தெரிவிக்கப்படவில்லை. இதனால் அதிருப்தி அடைந்த தன்கர், இன்று பகல் 1 மணிக்கு கூட்டத்தை ஒத்திவைத்தார். நேற்று பிற்பகல் 1 மணி முதல் மாலை 4.30 மணிக்குள் ஏதோ ஒரு தீவிரமான விஷயம் நடந்துள்ளது. இப்போது யாரும் எதிர்பாராத விதமாக தன்கர் ராஜினாமா செய்துள்ளார்" என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

## அகமதாபாத் விமான விபத்துக்கான காரணங்கள் என்ன? திமுக எம்.பி. கனிமொழி சோமு கேள்வி



அகமதாபாத் விமான விபத்துக்கான காரணங்கள் என்ன? என திமுக எம்.பி. கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார். பரபரப்பான அரசியல் சூழலில் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நேற்று தொடங்கியது. வரும் ஆகஸ்ட் 21ம் தேதி வரை இக்கூட்டத்தொடர் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த ஜ“ன் 12ம் தேதி அகமதாபாத்தில் ஏர் இந்தியா விமானம் விபத்துக்குள்ளான துயர் மிகுந்த சம்பவத்திற்கான காரணங்கள் குறித்து மாநிலங்களவையில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி சோமு கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில் அவர் கேட்டுள்ளதாவது இந்த விபத்தில் இறந்தவர்கள்ஃ காயமடைந்தவர்களின் எண்ணிக்கை என்ன? பயணிகள் தவிர மற்றவர்கள் உட்பட பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட இழப்பீடு எவ்வளவு? இதுவரை ஒன்றிய அரசு ஏதேனும் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதா? இந்த விபத்திற்கு காரணமாக யாரேனும் தனி நபர் அல்லது ஏதேனும் நிறுவனம் செய்த நாசவேலை வெளிச்சத்திற்கு வந்துள்ளதா? இந்த விபத்துக்கு பொறுப்பானவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்து நிகழாமல் இருக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? என்று கேள்வி எழுப்பியுள்ளார். (ஐ)



## ரயில் சென்று கொண்டிருந்த போதே பாலத்தின் தாங்கு சுவர் இடிந்து விழுந்து விபத்து

ஹிமாச்சல் பிரதேசத்தில் கனமழை பெய்துவரும் நிலையில், காங்ரா பகுதியில் பாலத்தில் ரயில் சென்றுகொண்டிருந்த போதே பாலத்தின் தாங்கு சுவர் இடிந்து விழுந்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நூற்றுக்கணக்கானவர்களை ஏற்றிச் சென்ற ரயில் சக்கி நதிப் பாலத்தைக் கடந்ததால், ஒரு பெரிய விபத்து தவிர்க்கப்பட்டது. யாருக்கும் காயம் ஏற்படவில்லை. ஒன்றிய பாஜக ஆட்சியில் ரயில்வே துறை சீரழிந்துள்ளதாக கடும் விமர்சனம் எழுந்துள்ளது.

இமாச்சலப் பிரதேசத்தின் பல மாவட்டங்களில் பெய்த கனமழையால் ஆறுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து, நிலச்சரிவு சம்பவங்களும் தினமும்வருகின்றன. சமீபத்திய சம்பவம்காங்க்ராவில் உள்ள ஜம்மு ரயில் பாதையில் உள்ளது, அங்கு ரயில்வே பாலத்தின் அடித்தளத்தின் பெரும்பகுதி தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டது.

ஆயிரக்கணக்கான பயணிகள் நிறைந்த ரயில் பாலத்தின் மீது சென்று கொண்டிருந்தபோது இந்த சம்பவம் நிகழ்ந்தது. விபத்துக்குப் பிறகு, ரயில்வே பழுதுபார்க்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த முழு சம்பவத்தின் வீடியோவும் சமூக ஊடகங்களில் மிகவும் வைரலாகி வருகிறது. (ஐ)

## வங்கதேசத்தில் பள்ளி மீது போர் விமானம் விபத்து பலி 27ஆக உயர்வு



டாக்கா: வங்கதேசத்தில் பள்ளி மீது போர் விமானம் விழுந்து நொறுங்கியதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 27-ஆக உயர்ந்துள்ளது. வங்கதேச ராணுவ போர் விமானம் பயிற்சிக்குச் சென்றபோது நேற்று தீப்பிடித்து விழுந்து நொறுங்கியது. டாக்காவின் வடக்கு உத்தரா பகுதியில் உள்ள கல்வி நிலையம் மீது போர் விமானம் விழுந்து நொறுங்கியது. போர் விமானம் விழுந்து நொறுங்கியதில் 170க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

# தமிழ் மொழியின் சிறப்பு

தமிழ்

தமிழை அமுதமாக பல்வேறு புலவர்கள், கவிஞர்கள் கூறினாலும் ஆங்கிலம் என்பது நம்முடைய சந்திப்பு மொழியாகிவிட்டது. இதில் நாம் குறைக் கூற தேவையில்லை. ஆனால் இறைக்கும் தமிழுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாக அக்கால சித்தர்கள் முதல் இக்கால ஆன்மீக வாதிகளும் கருதுகின்றனர். அதைப்பற்றிய ஒரு ஒப்பீடு.

முத்தி தருபவன் அவனே் ஞானம் தருபவன் அவனே் ஞானமாய் விளங்குபவனும் அவனே் பாலில் கலந்துள்ள நெய்போல் காணும் பொருளிலெல்லாம் கரந்துள்ளான்"

எனத்திருமூலர் இறைவனைப் போற்றும் போது " முத்தமிழாகவும் விளங்குகிறான் " எனக் குறிக்கின்றார். எல்லாமாய் விளங்கும் இறைவன் தமிழாகவும் விளங்குகின்றான். எல்லாவற்றிலும் சுரந்துள்ளவன், தமிழுள்ளும் கரந்துள்ளான். முக்தியும், ஞானமும் விழுமியன. அவற்றோடு தமிழையும் வைத்துப் போற்றுகின்றார்.

"முத்தியை ஞானத்தை முத்தமிழ் ஓசையை

எத்தனை காலமும் ஏத்துவர் ஈசனை

நெய்தலைப் பால்போல் நிமலனும் அங்குளன்

அத்தகு சோதியது விரும்பாரன்றே "- திருமந்திரம்.

வேறு ஒரு பாடலில் திருமந்திரப் பாடலில் சாத்திரத்தை தமிழில் படைக்கும் அருளைக் கூட்டிப் பாடச் செய்த பெருங் கருணையைப் பாடி பரவுகிறார்.

:"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே…"

இவ்வரிகளில் தமிழில் பாடும் அருள் கிட்டியதன் பெருமை தொக்கி நிற்பதைக் காணலாம்.

" அருமலர் மொழியுஞான அமுர்த செந்தமிழைச் சொல்வாம் "

ஞானவெட்டியான்

"பண்டுடன் பழகி பைந் தமிழுணர்ந்து தெண்ரை மீதிற் றெளிந்தவர் சித்தரே "

" சிந்தையுறு ஞானந் தெளியவுரை பாடுதற்கு

வந்தபஞ்ச பூதத்தின் வாழ்க்கையே- செந்தமிழ் நூல்

காவியந்தானாயிரத்தில் கல்லா யரு நூலும்


தேவியென்னும் பூரணியே சீர்


-அகஸ்தியர் ஞானம் 100

பொதிகை மேவு மகத்தீர ராலெனது

போத இத்தமிழ் வாக்கியம் - ஞான வெட்டியான் 1500

கருத்து விளக்கத்திற்காகப் பயன் படுத்தப்படும் உவமை இலக்கிய சுவைக்கு மெருகூட்டுவது கும். சித்தர் பாடல்களில் கணக்கற்ற உவமைகள் காணப்படுகின்றன.



வள்ளலார் தமிழை பித்ரு மொழியாக கருதுகிறார். இறைவன் தன்னை தமிழால் வளர்க்கின்றார் என்பதை "மெய்யடியார் சபை நடுவே எந்தை உனைப்பாடி மகிழ்ந்தின் புறவே வைத்தருளிச் செந்தமிழின் வளர்க்கின்றாய் (4802)

மேலும்,

வடிக்குறும் தமிழ்க்கொண்டு அன்பருக்கு அருளும் வள்ளலே- 875 என இறைவனை ப்போற்றி துதிக்கின்றார்.

சாகாகலை தந்தது- தமிழ் மொழி

ஆரவாரமில்லா மொழி- தமிழ் மொழி

தமிழ் உச்சரிப்பு சாகாகலைக்கு முக்கிய பங்காகும் என வள்ளலார் கூறுகின்றார்.

வள்ளல் பெருமானை ப்பற்றி ராமலிங்கரும் தமிழும் -என திரு ஊரன் அடிகள் தனி புத்தகம் வெளியிட்டுள்ளார்கள்.

எனவே வள்ளலார் தமிழ் மொழிமேல் எவ்வளவு பற்று வைத்திருந்தார் என்பதை யூகித்துக்கொள்ளவும்.

அருணகிரிநாதரின் சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவம் உண்டு. வில்லிப்புத்தூ ரார் என்னும் ஸ்ரீவைஷ்ணவர் ஒருவர் தமிழ் வாதுக்கு புலவர்களை அழைக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்.

வாதில் தோற்றவர்களின் காதை ஒட்ட அறுத்து, விரட்டி அடித்துவிடுவார். இதனால் பல புலவர்கள் அந்த வட்டாரத்திற்குள்ளும் நுழைய அஞ்சியிருந்தனர். அதை அறிந்த அருணகிரிநாதர் அந்த வழக்கத்தை உடனடியாக நிறுத்தி, புலவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற நோக்கம் கொண்டார். ஆகவே வில்லிப்புத்தூராரை நாடிச் சென்றார். அவரையும் வில்லிப்புத்தூ ரார் வாதுக்கழைத்தார்.

வில்லிப்புத்தூரார் தம்முடைய கையில் நீளமான துரட்டியைப் பிடித்திருப்பார். அதன் ஒரு நுனியில் காதை அறுக்கக்கூடிய பதமான வளைந்த கத்தி இருக்கும். அதை எதிராளியின் காதின் மீது வைத்துக்கொண்டு கேள்விகளைக் கேட்பார். பாடல்களைச் சொல்லச் சொல்வார். ஏதும் வழு இருந்தால் உடனடியாக எட்டினமட்டும் காதை அறுத்துவிடுவார்.

அருணகிரியோ ஒரு புது கண்டிஷனைப் போட்டுவிட்டார். அதாவது இருவர் கையிலும் காதறுக்கும் துரட்டி இருக்கவேண்டும். அருணகிரி ஓர் அந்தாதியைப் பாடுவார். அதில் ஒரே ஒரு பாடலுக்கு மட்டும்வில்லி அர்த்தம் சொல்லிவிட்டால் போதும். அவ்வாறு சொல்லிவிட்டால் வில்லிப்புத்தூரார் வென்றவர் ஆவார். வென்றவர் எட்டினமட்டும் தோற்றவர் காதை அறுத்துவிடலாம். அப்படி வில்லி பொருள் சொல்லவில்லையென்றால் வில்லியின் காதை அருணகிரி அறுக்கலாம். வில்லியும் ஒத்துக்கொண்டார்.

வாதத்தை வளர்த்துச்செல்லவிரும்பாத அருணகிரி, ஒரு பாடலைத் தாமே சொல்லி, அதன் பொருளைக் கேட்டார். வில்லிப்புத்தூரார் விதிர்த்துப்போய் அமர்ந்துவிட்டார். ஏனெனில் அந்தப் பாடல் தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை.

அது ஒரு "தகரவர்க்க"ப் பாடல். முற்றிலும் "த" என்னும் எழுத்தின் வரிசையிலேயே இந்தப் பாடல் முழுமையும் அமைந்திருக்கும். சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் இவ்வகைப்பாடல்கள் உண்டு. "ஏகாக்ஷரப் பாடல்" என்று சொல்வார்கள். தமிழில் ககரவர்க்கம், தகரவர்க்கம் ஆகியவற்றில் பாடல்கள் உண்டு. காளமேகப்புலவர், அருணகிரிநாதர் முதலியோர் பாடியிருக்கின்றனர். வில்லிப்புத்தூரார் தம்முடைய தோல்வியை ஒப்புக்கொண்டு, தம் காதை அறுத்துக்கொள்ளுமாறு அருணகிரியிடம் கேட்டுக்கொண்டார். அருணகிரியோ அது தம்முடைய நோக்கமல்ல என்றும் புலவர்களை இவ்வாறு அவமதித்து அவர்களுக்குக் கொடுமை செய்வதை நிறுத்தச் செய்யவேண்டும் என்பதே விருப்பம் என்றும் சொல்லிவிட்டார். வில்லிப்புத்தூரார் அருணகிரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தாம் இனி தமிழை வளர்க்கப் பாடுபடப் போவதாக வாக்குறுதி கொடுத்தார். பின்னாட்களில் அவர் தமிழில் மகாபாரதத்தைப் பாடினார். அந்த நூல் அவருடைய பெயராலேயே 'வில்லி பாரதம்' என்று வழங்குகிறது.

# கனடாவில் வேலை வாய்ப்பை இழக்கவுள்ள ஆயிரக்கணக்கானோர்



நிதி நெருக்கடி காரணமாக, கல்வித் துறையில் பணியாற்றும் 10,000 பேரை, பணி நீக்கம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக, கனேடிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில், இந்திய மாணவர்களின் சேர்க்கை குறைந்துள்ளமையே, இதற்கான காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கனேடிய அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை, நிதிப் பற்றாக்குறையால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சமாளிக்க எடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கல்வித் துறையில் செலவுகளைக் குறைக்கும் நோக்கில் இந்த பணிநீக்கங்கள் செய்யப்படுகின்றன.

இந்த பணிநீக்கங்கள், கல்வித் துறையில் ஏற்கனவே உள்ள பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

குறிப்பாக, இந்த பணிநீக்கங்களால், கல்வித் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் மனநிலை மற்றும் பணித்திறன் ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்றும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

எனினும், கனேடிய அரசாங்கம் இந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும், கல்வித் துறையில் பணிபுரியும் மக்களின் வேலைவாய்ப்புகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் கோரிக்கைகள் எழுந்துள்ளன. (ஐ)

# அமெரிக்காவை புறக்கணித்து வரும் கனேடியர்கள்



கனேடியர்கள் அமெரிக்க சுற்றுலாவை புறக்கணித்து வருவதால் அமெரிக்க பொருளாதாரத்தில் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ளது.

Vancity என்னும் ஆய்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்காவுக்கு கனேடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவால் ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றின் அடிப்படையில், வாஷிங்டனில் கனேடியர்களால் பெறப்படும் வருவாய் 47 சதவீதமும், மொத்த அமெரிக்காவில் 33 சதவீதமும் குறைந்துள்ளது.

மேலும், அமெரிக்க இணையத்தள வர்த்தக நிறுவனங்களில் பொருட்கள் கொள்வனவு செய்யும் கனேடியர்களின் எண்ணிக்கை 14 சதவீதம் குறைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில் முக்கியமாக, ஆடை வர்த்தகம் 26 சதவீதம் குறைந்துள்ளதுடன், பரபரப்பாக காணப்படும் கனடா - அமெரிக்க எல்லைகளில் தற்போது போக்குவரத்து சுமார் 40 சதவீதம் குறைந்துவிட்டதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, கனேடியர்கள், வர்த்தகம், சுற்றுலா என முக்கிய விடயங்களில் அமெரிக்காவை புறக்கணிக்க ஆரம்பித்துள்ள நிலையில், இந்த நிலை மீண்டும் முன்போல் மாற வெகு காலம் எடுக்கலாம் என்றும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## மன்னர் சார்லஸின் சிவந்த கண் வெளியான காரணம்



வின்ட்சர் அரண்மனையில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோனை சந்தித்த போது, மன்னர் சார்லஸின் ஒரு கண் சிவப்பாக மாறியிருந்தது.

இதனையடுத்து, மன்னர் சார்லஸின் உடல்நிலை குறித்து பலரும் கவலைகளை எழுப்பியிருந்தனர்.

இந்நிலையில், மன்னரின் ஒரு கண்ணில் இரத்த நாளம் வெடித்ததாலேயே கண் சிவப்பாக மாறியிருந்ததாக பக்கிங்ஹாம் அரண்மனை தெரிவித்துள்ளது.

அத்துடன், மன்னரின் தற்போதைய புற்றுநோய் சிகிச்சைக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அரண்மனை தெளிவுபடுத்தியுள்ளது.

மருத்துவ ரீதியாக சப்கான்ஜ/ன்டிவல் எனப்படும் இந்த கண் இரத்தக்கசிவு வலுவான தும்மல் அல்லது இருமல் போன்ற எளிமையான ஒன்றால் கூட ஏற்படலாம். எனவே, இது பொதுவாக கவலைப்படக்கூடிய ஒரு விடயமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவை பொதுவாக ஒன்று முதல் இரண்டு வாரங்களுக்குள் தானாகவே இயல்புநிலைக்கு திரும்பிவிடும் எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

# தீவிரமடையும் போராட்டக்களம் 100இற்கு மேற்பட்டோர் கைது!




பாலஸ்தீன நடவடிக்கையை பயங்கரவாதக் குழுவாக தடை செய்யும் தீர்மானத்திற்கு எதிராக பிரித்தானியா முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்களில் கிட்டத்தட்ட 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

நேற்றைய தினம், லண்டன், எடின்பர்க், மான்செஸ்டர், பிரிஸ்டல் மற்றும் ட்ரூரோவில் பாலஸ்தீன ஆதரவு ஆர்வலர் குழுவிற்கு ஆதரவாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வெஸ்ட்மின்ஸ்டரில் நடந்த மிகப்பெரிய போராட்டங்களில், பாலஸ்தீன நடவடிக்கைக்கு ஆதரவாக பதாகைகளை வைத்திருந்ததற்காக பயங்கரவாத குற்றங்கள் தொடர்பான சந்தேகத்தின் பேரில் 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2000ஆம் ஆண்டு பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் இந்த மாத தொடக்கத்தில் பாலஸ்தீன குழுவைத் தடை செய்தது. சுயுகு தளத்தில் நடந்த ஊடுருவலைத் தொடர்ந்து, குறித்த குழுவில் உறுப்பினராக இருப்பது அல்லது அதற்கு ஆதரவளிப்பது குற்றவியல் நடவடிக்கை என பிரித்தானியா தெரிவித்தது.

இந்நிலையில் குறித்த தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பிரித்தானிய முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், நாடு முழுவதும், போராட்டக்காரர்கள் "நான் இனப்படுகொலையை எதிர்க்கிறேன். பாலஸ்தீன நடவடிக்கையை ஆதரிக்கிறேன்" என்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனை தொடர்ந்து, அதிரடியாக களமிறங்கிய பிரித்தானிய பொலிஸ் அதிகாரிகள், கிட்டத்தட்ட 100 பேரை கைது செய்துள்ள நிலையில் கைதானவர்களில் பெரும்பாலானவர்கள் வயதானவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# மர்மமான முறையில் உயிரிழக்கும் தூதுவர்கள்! ஈரான் மீது சந்தேகம்



சுவிஸ் தூதுவர்கள் இருவர் ஈரானில் வைத்து படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் என சுவிட்சர்லாந்தின் உளவுத்துறை தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஈரானில் இரண்டு சுவிஸ் தூதுவர்கள் மற்றும் ஒரு சுற்றுலாப்பயணி ஆகியோர் மர்மமான முறையில் உயிரிழந்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஈரானுக்கான சுவிஸ் துணைத் தூதர் சில்வி ப்ரனர்(Sylvie Brunner) தாம் தங்கியிருந்த குடியிருப்பின் 17ஆவது மாடியிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டு கொல்லப்பட்டதாக சந்தேகிக்கப்படுகின்றது.

ஈரானிய அதிகாரிகள் அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்ததாக உறுதிப்படுத்தினர்.

இது நடந்து இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் சுவிஸ் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெஹ்ரானில் உள்ள ஒரு விடுதியில் சரிந்து விழுந்து தலை மற்றும் வயிற்றில் பலத்த காயங்கள் ஏற்பட்டு சில மாதங்களுக்கு பின்னர் உயிரிழந்தார். இதனையடுத்து, சுவிஸ் தூதரக ஊழியர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும் அவர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினார்.

அவர் மீதான தாக்குதல் ஒரு வழிப்பறி முயற்சி என ஈரான் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டாலும் அந்த சம்பவத்தில் சந்தேகம் இருப்பதாக சுவிஸ் உளவு அமைப்புகள் கூறியுள்ளன. இதேவேளை, கடந்த ஜனவரி மாதம், உளவு பார்த்த குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட 60 வயது சுவிஸ் சுற்றுலாப் பயணி ஒருவர் செம்னான் சிறையில் தவறான முடிவெடுத்து உயிரிழந்தார். அவரது உடல் சுவிட்சர்லாந்துக்கு திருப்பி அனுப்பப்பட்ட போதிலும் பிரேத பரிசோதனை முடிவுகள் இன்னும் பகிரங்கப்படுத்தப்படவில்லை.

ஈரானில் உள்ள சுவிஸ் தூதரகம் அமெரிக்காவிற்காக பணியாற்றுவதாக ஈரான் கருதுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தென்னக்கோன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருந்து நீக்குவதற்காக முன்வைக்கப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த குழுவின் அறிக்கை தம்மிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார்.

தேசபந்து தென்னக்கோன் சம்பந்தப்பட்டார் எனக் கூறப்படும் முறைகேடுகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவராக உயர்நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன செயற்படுகின்றார்.

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் தவிசாளர் ஓய்வுபெற்ற நீதிபதி நீல் இத்தவெல மறறும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தவிசாளர் ஈ.டபிள்யூ. எம். லலித் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில், அவர் எதிர்வரும் 25 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தில் தனது பிரியாவிடை உரையை நிகழ்த்தவுள்ளார்.

நீண்ட கால நீதித்துறை சேவையில் அனுபவம் பெற்ற பிரீதி பத்மன் சூரசேன, உயர்நீதிமன்றின் சிரேஷ்ட நீதியரசர்களில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், அவர் நீதித்துறை சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றிய அனுபவம் பெற்றவர்.

இதேவேளை, நாட்டில் பரபரப்பாகப் பேசப்பட்ட பல முக்கிய வழக்குகளில் நீதிபதியாகப் பணியாற்றியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போதும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் மீது எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தும் நாடாளுமன்ற மூவரடங்கிய விசாரணைக் குழுவின் தலைவராகவும் அவர் அங்கம் வகிக்கின்றார்.

இந்தப் பரிந்துரை ஏற்கப்பட்டால் பிரீதி பத்மன் சூரசேன, இலங்கையின் அடுத்த பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவார்.

## தலைமன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் இன்று செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை இரவு கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர், இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்துக்கொண்டிருந்த இந்திய இழுவைப் படகு ஒன்றைக் கைப்பற்றினர். அந்தப் படகில் இருந்த 4 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

பின்னர் அந்த மீனவர்களையும், இழுவைப் படகையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர். தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர், இழுவைப் படகுடன் 4 இந்திய மீனவர்களையும் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளின் பின்னர் 4 இந்திய மீனவர்களையும் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தினர்.

மேற்படி மீனவர்களை எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

## 86.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டிருந்த பரல் ஒன்றில் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட 86 கைக்குண்டுகளுடன் ஒருவர் வவுனியா மாவட்டக் குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டார்.

நேற்று கொழும்பில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் விடுதலைப் புலி போராளி வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பிள் இருந்து வருகை தந்த புலனாய்வுத்துறை அதிகாரிகளோடு வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவு பொலிஸாரும் இணைந்து செட்டிகுளம் - துட்டுவாகை மற்றும் நேரியகுளம் பகுதிகளில் உள்ள இரு வீடுகளில் சோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, நேரியகுளத்தில் வீடு ஒன்றின் அருகாமையில் பிளாஸ்டிக் பரல் ஒன்றினுள் 86 கைக்குண்டுகள், ரி - 56 ரக துப்பாக்கிக்கான ரவைகள், கைத்துப்பாக்கிக்கான மூன்று ரவைகள், 5 ஆயிரத்து 600 போதை மாத்திரைகள், 10 கிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன நிலத்தின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டு அந்த வீட்டின் உரிமையாளரான 22 வயது இளைஞர் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## துப்பாக்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

துப்பாக்கி மற்றும் 12 தோட்டாக்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் துப்பாக்கியைத் தம்வசம் வைத்திருக்க உதவி செய்த குற்றச்சாட்டில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் தெமட்டகொடை பகுதியில் வசிக்கும் 24 மற்றும் 42 வயதுடையவர்கள் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் விசாரணைப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## இனப்பிரச்சினைக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்துவிட்டது. எனினும், புதிய அரசமைப்பு தொடர்பில் அவர் தற்போது ஒரு வசனம் கூட கதைப்பதில்லை. குறைந்தபட்சம் எப்போது இதற்குரிய பணி ஆரம்பமாகும். எப்போது நிறைவு பெறும் என்பது தொடர்பில் கூட கருத்துத் தெரிவிப்பதில்லை.

இதன்மூலம் நாட்டில் அரசியல் கலாசாரத்தை மாற்றுவதற்கு இருந்த வாய்ப்பை அவர் இல்லாமல் செய்து வருகின்றார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்து அதிகாரத்தைச் சுவைத்து வருகின்றார். அதற்கு அப்பால் சென்று, அரசமைப்பு மறுசீரமைப்பைச் செய்வதற்கும் அவர் தயாரில்லை என்பது தெரிகின்றது

மேற்படி உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாதுள்ள சூழ்நிலையில் ஆணைக்குழுக்களின் சுயாதீனத்தன்மையை இல்லாது செய்வதற்கும். அரசமைப்பு சபையின் அதிகாரத்தைக் குறைப்பதற்கும் அரசு முயற்சிக்கின்றது என்று தகவல் வெளியாகியுள்ளது. இதற்காக அரசமைப்பு மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளது எனவும் கூறப்படுகின்றது. இது பாரதூரமான விடயமாகும்.

புதிய அரசமைப்பு எனக் கூறிவிட்டு, மக்கள் ஆணையை மீறும் வகையில் அரசின் அணுகுமுறைகள உள்ளன." - என்றார்.

# இலங்கை மின்சார திருத்தச் சட்டமூலம் விவாதத்துக்கு வராது

எதிர்வரும் 24 ஆம் திகதி இரண்டாவது மதிப்பீட்டுக்காக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலத்தை அன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் இருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் இன்று செவ்வாய்க்கிழமை (22) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

அதற்கமைய, அன்றைய தினத்தில் ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய 'உத்தேச புதிய கல்வி மறுசீரமைப்பு' தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதத்தை மாலை 5.30 மணி வரை நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் தொடர்பான தொழில்நுட்ப விடயங்கள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் மற்றுமொரு பாராளுமன்ற அமர்வு தினமொன்றில் இந்தச் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

(ஐ)

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணை குற்றவியல் விசாரணை பிரிவுக்கு (CID) மாற்றம்!

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் நேற்று முதல் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்துள்ளார்.

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் நேற்றையதினம் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் அகழ்வாய்வுத் தளத்தில் வைத்து ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்ட விடயத்தை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

அகழ்வாய்வின் முதல் நாளில் மேலும் ஏழு எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

அத்துடன் யாழ்ப்பாண பொலிஸாரினால் நடத்தப்பட்ட நீதித்துறை நடவடிக்கைகள் குற்றவியல் விசாரணை பிரிவுக்கு (ஊஐனு) மாற்றப்பட்டுள்ளதாகவும் சட்டத்தரணி தெரிவித்தார்.

ஏற்கனவே நடைபெற்ற அகழ்வாய்வு மூலம் 65 என்புக்கூட்டுத் தொகுதிகள்மீட்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் நேற்றையதினம் புதிதாக ஏழு எலும்புக்கூடுகள் அடையாளம்காணப்பட்டு, இதுவரையில் 72 பேரின் எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 06ஆம் திகதி திறந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மனுஷ நாணயக்காரவின் தனிப்பட்ட செயலாளர் ஷான் யஹம்பத் குணரத்ன பிணையில் விடுவிப்பு!

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தனிப்பட்ட செயலாளர் ஷான் யஹம்பத் குணரத்ன இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் தனிப்பட்ட செயலாளர் ஷான் யஹம்பத் குணரத்னவை பிணையில் செல்ல அனுமதித்து கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெக்குனவல உத்தரவிட்டார்.

இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் பிரதிவாதிகள் தரப்பு சட்டத்தரணிகள் முன்வைத்த வாதங்களை பரிசீலித்த பின்னர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதன்படி சந்தேக நபரை தலா 2.5 மில்லியன் ரூபாய் இரண்டு சரீரப் பிணைகளில் செல்ல அனுமதித்ததுடன், சந்தேக நபர் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்தும் உத்தரவிட்டார்.

# தேசிய சமத்துவமே அரசாங்கத்தின் நோக்கம்!

தேசிய சமத்துவமே அரசாங்கத்தின் நோக்கம் என சோசலிச இளைஞர் சங்கத்தின் தேசியக் குழு உறுப்பினர் மகேஷ் அம்பேபிட்டிய தெரிவித்தார்.

சகோதரத்துவ தினம் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு யாழ். தேசிய மக்கள் சக்தி மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

சோசலிச இளைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் 2008 ஆம் ஆண்டு முதல் சகோதரத்துவ தின நிகழ்வுகளை நடத்தி வருகின்றோம். சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்காக 17 ஆண்டுகளாக செயற்படுகின்றோம். இம்முறை கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு சகோதரத்துவ ரயில் பயணம் இடம்பெறவுள்ளது.

1981 மே 31 ஆம் திகதி யாழ். வந்த ரயில் நிலையத்தில் குருணாகலை ரயில் நிலையத்தில் இருந்து அரசியல் குழுவொன்று ஏறியது. காமினி லொக்குகே, காமினி திஸாநாயக்க, காமினி ஜயவிக்கிரம, சிறில் மெத்திவ், கிறிஸ்டன் பெரேரா, ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினர் வைராக்கியம், குரோதம், பிரிவினையை எடுத்து வந்தனர். அவற்றை எடுத்து வந்துதான் ஆசியாவின் மிக்பெரிய பொக்கிஷமான நூலகத்தை எரித்தனர்.

எனவேதான் அந்த ரயிலில் சகோதரத்துவத்தை நாம் நாளை எடுத்துவருகின்றோம். 1981 இல் ஆரம்பமான குரோதம் 1983 இல் கறுப்பு ஜ/லையாக மாறியது. இறுதியில் பிரச்சினை போர்வரை வந்தது. இந்த கறுப்பு புள்ளி இன்னும் நீங்கவில்லை. ஆட்சியாளர்களும் அரசியலுக்காக மக்களை பிரித்தாளும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

வடக்கையும், தெற்கையும் தமது அரசியலுக்காக அரசியல்வாதிகள் பிரித்தார்கள். தமது சுகபோக வாழ்வுக்காக மக்களை பிரித்தார்கள்.

அந்த யுகம் தற்போது முடிந்துவிட்டது. புதிய நாடு உருவாகி வருகின்றது. புதிய யுகத்தை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றோம். தேசிய சமத்துவமே அரசாங்கத்தின் நோக்கம். அதற்காக ஜனாதிபதியும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றார் - எனத் தெரிவித்தார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.07.2025 வெளியிடப்பெற்றது.